பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 19 திங்கட்கிழமை 02.02.2026 | அதிர்வு 185

## யாழ்ப்பாணத்தில் இன்று இராணுவ வான் மோதி முதியவர் ஒருவர் சாவு!



[விரிவான செய்தி 4 ஆம் பக்கத்தில்]

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



CLICK HERE VIDEO

# கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக நெடுங்கேணியில் பெரும் போர்

## உணர்வெழுச்சியுடன் திரண்ட மக்கள்

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக நெடுங்கேணியில் இன்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் உணர்வெழுச்சியுடன் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நெடுங்கேணி பஸ் நிலையம் முன்பாக இன்று காலை ஆரம்பமாகியது. இதன்போது கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக மக்கள் கோஷங்களை எழுப்பியதுடன், பதாதைகளையும் தாங்கியிருந்தனர். 02










# கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக நெடுங்கேணியில் பெரும் போர்

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து நெடுங்கேணி பிரதேச செயலகம் வரை ஊர்வலமாகக் கோஷங்களை எழுப்பியவாறு சென்றிருந்தனர். அங்கும் மக்கள் ஒன்று கூடி தமது எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியதுடன், வவுனியா வடக்கு பிரதேச செயலாளரிடம் மகஜரொன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக வழங்கியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு, கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெருமளவான தமிழ் மக்கள் கலந்து கொண்டு அரசின் திட்டமிட்ட நில அபகரிப்பு எதிராகக் குரல் கொடுத்திருந்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பின்களான சி.சிறீதரன்,

தொடர்ச்சி▼

















# கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக நெடுங்கேணியில் பெரும் போர்

தொடர்ச்சி▲

இரா.சாணக்கியன்,து.ரவிகரன்,ப.சத்திய லிங்கம், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர்களான எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மு.சந்திரகுமார், சாந்தி சிறிஸ்கந்தராஜா, தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஜன நாயகப் போராளிகள் கட்சியின் பேச்சா ளர் துளசி, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றி ருந்தனர்.


















குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# யாழில் இராணுவ வாகனம் மோதி முதியவர் ஒருவர் பரிதாப மரணம்!





**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனம் மோதி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மயிலிட்டிப் பகுதியில் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த முதியவரை இராணுவ வாகனம் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நவரட்ணம் என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவப் பொலிஸார் மற்றும் பலாலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# திருமலை நீதிமன்றம் முன்பாக அரசுக்கு எதிராகப் போராட்டம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

"தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் பௌத்த சமயத்தை அவமரியாதைக்கு உட்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும்" என்று கோரி இன்று திருகோணமலை நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக மூன்று பேர் வீதியில் அமர்ந்து கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுஜன அரகலய குடிமக்கள் கூட்டமைப்பு என்ற அமைப்பின் செயலாளர் சானக்க பண்டார மற்றும் சிங்கள பௌத்த ஐக்கியம் அமைப்பின் செயலாளர் லங்கா தரங்க உள்ளிட்ட மூவரே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்று திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில், திருகோணமலை கடற்கரையில் சட்ட விரோத கட்டுமானத்தை அமைத்து, அதில் புத்தர் சிலை ஒன்றை வைத்தமை தொடர்பான வழக்கு நடைபெற்ற சந்தர்ப்பத்திலேயே இந்தக் கவன வீர்ப்புப் போராட்டம் நீதிமன்றத்துக்கு முன்பாக நடைபெற்றது.



# அமைதிப் போராட்டத்தை மதிக்கத் தவறினால் அமைதியற்ற போராட்டத்துக்கும் நாம் தயார்!

## சாணக்கியன் எம்.பி. பகிரங்க அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

சும்மா சாம்பிலா இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியை மதிக்காது கிவுல் ஓயா திட்டம் தொடருமானால் மிகப் பிரமாண்டமாக அரச அலுவலகங்களை முடக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டாம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மகாவலி எல் வலயம் எனப் பிரகடனப்படுத்தி மேற்கொள்ளத் திட்டமிடும் கிவுல் ஓயாத் திட்டத்தை எதிர்த்து நெடுங்கேணியில் இன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் நிறைவில் பிரதேச செயலாளரிடம் மகஜரைக் கையளிக்கும்போதே பிரதேச செயலாளரிடம் ஜனாதிபதிக்கு அறிவிக்குமாறு இதனைத் தெரிவித்தார் சாணக்கியன் எம்.பி.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் கூறுகையில்,

“அமைதி வழிப் மோராட்டத்தை செவிமடுத்து இனப் பரம்பலை மாற்றி அமைக்கக்கூடிய வழியிலான திட்டத்தைக் கைவிட்டால் நாமும் போராட்டத்தைக் கைவிடுவோம். மாறாக திட்டத்தைத் தொடர முயன்றால் எதிர்காலத்தில் அமைதி வழிப் போராட்டம் அன்றி அமைதியற்ற போராட்டத்துக்கும் நாம் தயாராகுவோம்.” – என்றார்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதி மறுக்கப்படுகிறது?

ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பாக உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று அதிகாரத்துக்கு வர முன்னரே வாக்குறுதி கொடுத்த தேசிய மக்கள் சக்தி தன்னுடைய அரசாங்கம் பதவிக்கு வந்து சுமார் ஒன்றரை வருடமாகியும் அதில் கணிசமான தூரம்தன்னும் முன்னேறி இருப்பதாகத் தெரியவில்லை.

இதற்கிடையில், ஏற்கனவே இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் ஆறு வருடங்களுக்கு மேல் தொடர்ந்து சிறை வைக்கப்பட்டிருக்கும் 24 கைதிகளுக்கு எதிரான 'ட்ரயல் அட் பார்' நீதிமன்ற விசாரணையில் அந்த கைதிகள் சட்டத்தரணிகள் இல்லாமல் அந்தரிக்கும் அவல நிலை ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த வழக்கில் 2,190 சாட்சிகளை சட்டமா அதிபர் பட்டியலிட்டுள்ளார்.

'ட்ரயல் அட் பார்' விசாரணைகள் ஆரம்பமானால் தொடர்ந்து காலை 9:30 முதல் மாலை 4:30 மணி வரை ஒவ்வொரு அரச வேலை நாள்களும் தடையின்றி விசாரணைகள் நடைபெற வேண்டும்.

ஆனால் அப்படி தினசரி தொடர்ந்து வழக்குகளுக்கு பிரசன்னமாக முடியாது என்பதனால் வழக்குகளை வாரத்தில் மூன்று நாள்களுக்கு மாத்திரம் நடத்தும்படி சட்டத்தரணிகள் முன்வைத்த கோரிக்கையை அரசுத்தரப்பு நிராகரித்துவிட்டது.

இதனாலும், பல்வேறு இடங்களிலும் இந்த 24 எதிரிகளும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமையால் அவர்களோடு ஒழுங்கு முறையாக ஊடாடல் நடத்த முடியாத காரணத்தினாலும் இந்த வழக்குகளில் இருந்து தாங்கள் விலகுகின்றார்கள் என அவர்களின் சட்டத்தரணிகளான இரட்ணவேல், கசைலி ஹூசைன், ருஷ்டி ஹபீப், நிரஞ்சன் சிறிவர்த்தன ஆகியோர் ஒன்றாக நீதிமன்றம் முன் விண்ணப்பம் ஒன்றை வைத்துள்ளனர்.

இந்தப் பின்புலத்தில் எதிரிகள் 24 பேரும் இக்கட்டான சிக்கலில் கைவிடப்பட்டிருக்கிறார்கள். ஒன்றில் அவர்கள் தங்களுக்கான புதிய சட்டத்தரணிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அல்லது நீதிமன்றமே நியமிக்கும் சட்டத்தரணிகளோடு வழக்கைக் கொண்டு நடத்த வேண்டும். அல்லது தாங்களே தங்களுக்காக நீதிமன்றில் முன்னிலையாகி வாதிட வேண்டும்.

அந்தக் கைதிகளுக்கு நீதி, நியாயமான ஒரு விசாரணை கிடைப்பதற்கு இந்த மூன்று வழிகளிலும் சாத்தியம் இல்லை என்பதால் அவர்கள் இந்த வழக்குகள் தொடர்பில் நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

வழக்கில் 24 கைதிகளுக்கு எதிராக மொத்தம் 23,269 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. குற்றப்பத்திரிகை மாத்திரம் 23 ஆயிரம் பக்கங்கள் கொண்டதாக உள்ளது. அது தமிழிலும், சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வளவு நீண்ட குற்றப் பத்திரம், இரண்டாயிரத்துக்கும் அதிகமான சாட்சிகள், 184 சான்றுப் பொருள்கள் கொண்ட இந்த வழக்கின் விசாரணை அரச வேலை நாள்கள் முழுவதும் தொடர்ந்து நடைபெற்றாலும் கூட பல மாதங்கள் கடந்து தொடர்ந்து நீடிக்கும் என்பது வெளிப்படையானது. அவ்வளவு காலமும் தினசரி நீதிமன்றுக்கு சட்டத்தரணிகள் தவறாது பிரசன்னமாவது என்பது சாத்தியமானதா என்று கேள்வியும் எழுகின்றது.

இந்தப் பின்புலத்தில் அந்த 24 கைதிகளுக்கும் நீதியான விசாரணைகளுக்கான வாய்ப்பு மறுக்கப்பட போகின்றது என்றுதான் தோன்றுகின்றது.



# சிறு கைத்தொழில் முயற்சியாளரின் கண்காட்சியும் விழிப்புணர்வு நிகழ்வும்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்று மற்றும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் சிறு கைத்தொழில்களில் ஈடுபடும் கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சியும், அவர்களின் தொழில் முயற்சிகளை மென்மேலும் விஸ்த்தரிப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் வெல்லாவெளி கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் எஸ.ரங்கநாதன் நடைபெற்ற இந்த நிகழ்வில் றோட்டறிக் கழகத்தின் ஆளுனரின் பிரதிநிதி ம.ஜெகவண்ணன், மாவட்ட அளுனர் டெல்வின் பெரேரா, அக்கழகத்தின் பட்டிருப்பு கழக தலைவர் வைத்தியர் பாமதி ஞானப் பிரகாசம், மதர் ஸ்ரீலாங்கா அமைப்பின் தலைவர் வைத்தியர் ஞானகி குருபு, வங்கி முகாமையாளர் கள், மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி யாளர்கள், என பலரும் கலந்து கொண் டிருந்தனர்.

இதன்போது தற்போது கிராமிய மட்டத்தில் சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டு வரும் முயற்சியாளர்களின் தொழில்களை மென்மேலும் விஸ்த்தரிப்பதற்கு மிகக் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வசதிகள் பெறுவதற்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு, தொழில் முயற்சிகளுக்குத் தேவையான ஆலோசனைகள், பதிவு தொடர்பான விடயங்கள் இதன்போது தெழிவூட்டப்பட்டன. உற்பத்திகளும் காட்சிப்படுத்தப்பட்டன.



# மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கான சேவைகள் தொடர்பான விழிப்புணர்வு



(த.சுபேசன்)

மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கான உட்படுத்தல் கல்வியை வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் நடைமுறைபடுத்தும் திட்டத்தின் ஒரு அங்கமாக மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் தெளிவூட்டல் கருத்தமர்வு சங்கானை பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டது.

ஜெசாக் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் கே.என்.எச். மற்றும் பி.எம்.சட் நிறுவனங்களின் நிதி அனுசரணையில் மேற்படி விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெக்கப்பட்டது.

மேற்படி விழிப்புணர்வு நிகழ்வில் மாற்றுத்திறனாளி சிறுவர்களின் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும் மாற்றுதிறனாளி சிறுவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.



# புதுக்குடியிருப்பில் வர்த்தக நிலையங்களில் புகைத்தல் பொருள்கள் விற்பனைக்கு ஆப்பு!

## கட்டுப்படுத்தத் தீர்மானம் நிறைவேற்றம்

**(பா.சதீசன்)**

புதுக்குடியிருப்பிலுள்ள பலசரக்கு கடைகளில் புகைத்தல் பாவனை பொருள்கள் விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வேலாயுதம் கரிகாலன் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டுக்கான முதலாவது பிரதேச சபை புதுக்குடியிருப்பு பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் பிரதேசசபையின் தவிசாளர் வே.கரிகாலன் தலைமையில் இடம்பெற்றிருந்தது. சபை அமர்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வாண்டு புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உள்ளிட்ட பகுதிகளில் அதிக அபிவிருத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. இரண்டு பிரதேச செயலகங்களைக் கொண்ட பரந்துபட்ட எல்லையாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை இருக்கின்றது. வீதி வேலைகள், மின்விளக்கு பொருத்துதல் ஏனைய மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் போன்ற நீண்ட வேலைப்பாடுகள் உடைய திட்டங்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் 2026 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

இன்றைய சபை அமர்வில் சபை உறுப்பினர்களின் பிரேரணை மூலம் மதுபானசாலை முன்பாக, மதுபானங்களை அருந்திவிட்டு போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பது, பலசரக்கு கடைகளில் புகைத்தல் பாவனை பொருள்களை விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் உறுப்பினர் கு.அகிலன் பிரேரணையை சபைக்குக் கொண்டு நவ்த நிலையில் இந்தத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் மணல், கிரவல் வேலைத் திட்டங்கள் எதிர்காலத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. அது தொடர்பான முடிவுகளும் எடுக்கப்பட்டுள் ளன.

குறிப்பாகப் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதி மக்களுக்கும் தேவையான மணல், கிரவலை பெற்றுக் கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர் கொள்கின்றனர். அந்தவகையில் மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்து வருகின்றோம். குறிப்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நிலங்களிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாண்டு முல்லைத்தீவு மாவட்டத்துக்கென பல்வேறுபட்ட நிதி மூலங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகள் புனரமைப்பு செய்வது தொடர்பாக ஏனைய திணைக்களங்கள் முறையாக எம்மிடம் ஒப்புதல்களை பெற்று வீதி அபிவிருத்தி வேலை திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

புதுக்குடியிருப்பு எல்லைப் பகுதியில் குறிப்பாகக் காட்டுப் பிரதேசங்களில் இருக்கும் மின்விளக்குகள் தொடர்பாக அந்த பகுதி மக்களின் கோரிக்கைக்கு அமைவாக நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.- என்றார்.





# சமூர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள்

**(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)**

சமூர்த்தி திணைக்களத்தால் இனங்காணப்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 2025 ஆம் ஆண்டுக்கான சமூர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்களை அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச அபிவிருத்தி குழுத் தலைவரும், அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் மௌபிகா, சமூர்த்தி தலைமைபீட முகாமையாளர் நஜீம், சமூர்த்தி முகாமையாளர் ரியாத் மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்கள், பிராஜாசக்தி தவிசாளர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# யாழ். ஒஸ்மானியா கால்கோள் விழா!

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் தரம் ஒன்று புதுமுக மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழா பாடசாலை பதில் அதிபர் ஜனாபா எம்.எஸ்.எப்.சப்னா தலைமையில் பாடசாலை மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்றது.

சின்னப் பள்ளிவாசல் முன்றலில் துஆ பிரார்த்தனையுடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு அங்கிருந்து அதிதிகள் பாண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு பாடசாலை முன்றல்வரை அழைத்துவரப்பட்டனர். அங்கு தேசியக் கொடி, பாடசாலை கொடி என்பன தேசிய கீதம், பாடசாலை கீதம் இசைக்கப்பட்டு ஏற்றப்பட்டன. பிரதான நிகழ்வுகள் மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கதீஜா மகா வித்தியாலயத்தின் அதிபர் செல்வி ஏ.சி.ஜென்சி கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக நிகழ்வின் அனுசரணையாளர்களான செண்டிப் நிறுவனத்தின் தவிசாளர் எம்.எஸ்.எம்.ஜான்சன், உம்மு சாரா பவுண்டேசனின் பிரதிநிதிகளான என்.எம்.அப்துல்லாஹ் மற்றும் எஸ்.எம்.நாஸர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகரசபையின் முஸ்லிம் உறுப்பினர்கள், உலமாக்கள் மற்றும் ஜே - 86 மற்றும் ஜே - 87 பிரிவிலுள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். தரம் ஒன்று மற்றும் தரம் இரண்டு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் மேடையில் அரங்கேற்றப்பட்டன.

புதிதாக தரம் ஒன்றில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கு செரண்டிப் கல்வி நிறுவனத்தின் ஊடாக பாடசாலை புத்தகப்பை மற்றும் ஒருவருக்கு தலா 2500 ரூபாய் பணக் கொடுப்பனவும் வழங்கப்பட்டன. மேலும் உம்மு சாரா பவுண்டேசனின் அனுசரணையில் ஒவ்வொரு மாணவர்களுக்கும் பாடசாலை சீருடை துணி மற்றும் சப்பாத்து என்பனவும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், செரண்டிப் நிறுவனத்தின் உறுப்பினர்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி ஏ.எம்.அப்துல் அஸீஸ் (காஸிமி), சின்னப்பள்ளிவாசல் பிரதம இமாம், பாடசாலையின் பதில் அதிபர், ஆசிரியர்கள், தரம் ஒன்று மற்றும் இரண்டு மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# மாந்தை மேற்கு சமுர்த்தி வங்கிகள் இலாபத்தை ஈட்ட ஆலோசனை

(வாஸ் கூஞ்ஞ)

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் இரு சமுர்த்தி வங்கிகள் நஷ்டத்தில் இயங்குவதால் இவற்றை ஒன்றிணைத்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்வது சிறந்தது என்று என்று மன்னார் மாவட்ட சமுர்த்தி தொழிற் சங்கத்தால் ஆலோசனை முன்வைக்கப் பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட சமுர்த்தி உத்தியோ கத்தர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட செயலாளர் க. கனகேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மன்னார் மாவட்ட சமுர்த்தி தொழிற் சங்கத் தலைவர் ஏ.சி.அஸ்லிம் தலை மையில் சென்ற சமுர்த்தி நிர்வாக உறுப்பினர்கள் மன்னார் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பணிச்சூழல் தொடர்பான விடயங்கள், சேவை நடவடிக்கைகளில் காணப்படும் சவால்கள் மற்றும் பல்வேறு கோரிக்கை கள் குறித்து மன்னார் அரச அதிபருக்கு விரிவாக எடுத்துரைத்தனர்.

இதன்போது சமுர்த்தி உத்தியோகத் தர்களின் பதில் கடமைக் கொடுப்பனவு சம்பந்தமாகவும் அதேபோன்று மன்னார் மாவட்டத்தில் கடமை புரியும் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகள் சம்பந்தமாகவும் தளபாடங்கள் வழங்கப் படாத உத்தியோதர்களுக்கான தள பாடங்களை வழங்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக் கப்பட்டது.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் காணப்படும் வங்கிகளான இலுப்பக் கடவை மற்றும் விடத்தல் தீவு வங்கிகள் நட்டத்தில் இயங்கி வருகின்றன எனவும் எதிர்காலத்தில் இந்த வங்கிகளை லாபத்தில் இட்டுச் செல்லும் முறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இவைகள் தவிர உத்தியோதத்தர்களின் ஏனைய பிரச்சினைகள் மக்கள் நலன் சார்ந்த விடயங்களும் அரச அதிபருடன் கலந்துரையாடப்பட்டது.

இக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மன்னார் மாவட்ட உதவி செயலாளர், மன்னார் மாவட்ட சமுர்த்தி தொழிற்சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





பொனிஸ்ரெலா சந்தியாசன்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

# உணவே மருந்தான காலம் போய் மருந்தே உணவான சோகம்…!

“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்… திறம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்” என்றார் திருமூலர். மனித உடலை ஒரு கோயிலாகவும், அதை ஆரோக்கியமாகப் பேணுவதை ஒரு தவமாகவும் கருதியது நம் தமிழ் மரபு.

அன்று “உணவே மருந்து” என்ற தத்துவத்தின் அடிப்படையில் நம் சமையலறைகள் இயங்கின. ஆனால் இன்று, நவீன நாகரிகத்தின் பிடியில் சிக்கிய நாம், அந்தத் தத்துவத்தைத் தலைகீழாக மாற்றிவிட்டோம். இன்று பலரது வீடுகளில் காலை உணவுக்கு முன் ஒரு மாத்திரை, உணவுக்குப் பின் இரண்டு மாத்திரை என “மருந்தே உணவாக” மாறிப்போனது ஒரு கசப்பான நிஜம். இந்த அபாயகரமான மாற்றம் நமது எதிர்காலத் தலைமுறையை எங்கே கொண்டு செல்லப் போகிறது என்பதை நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தருணம் இது.

முந்தைய தலைமுறையினரின் சமையலறையில் இருந்த ‘அஞ்சறைப் பெட்டி’ என்பது ஒரு நடமாடும் மருந்தகம். அதில் இருந்த மிளகு சளியை விரட்டியது, மஞ்சள் கிருமிநாசினியாகச் செயல்பட்டது, சீரகம் செரிமானத்தைச் சீர்செய்தது, வெந்தயம் உடல் சூட்டைத் தணித்தது.

அன்று உணவில் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு மருத்துவக் குணம் இருந்தது. நோய்கள் வந்த பிறகு குணப்படுத்துவதை விட, நோய்கள் வராமல் தடுக்கும் ‘தற்காப்பு முறை’யாகவே நமது உணவுப் பழக்கம் அமைந்திருந்தது. பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப நம் முன்னோர்கள் உணவை மாற்றிக் கொண்டனர்.

மாரிக்காலத்தில் தூதுவளையும், கோடைக்காலத்தில் பழைய சோறும் கம்மங்கூழும் நம்மை இயற்கையோடு இணைத்து வைத்திருந்தன. ஆனால், இன்று அந்த இயற்கை ஞானத்தை நாம் “பழைமைவாதம்” என்று ஒதுக்கித் தள்ளியதன் விளைவை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

தொழில்நுட்ப வளர்ச்சியும், பன்னாட்டு நிறுவனங்களின் வருகையும் நம் உணவுத் தட்டை முற்றிலுமாக மாற்றிவிட்டன. “நேரமில்லை” என்ற ஒற்றைச் சொல்லால், நாம் பாரம்பரிய உணவுகளைத் துறந்து ‘துரித உணவு’ (Fast Food) மற்றும் ‘பதப்படுத்தப்பட்ட உணவு’ (Processed Food) கலாச்சாரத்துக்கு அடிமையானோம்.

சுவைக்காகச் சேர்க்கப்படும் அஜினோமோட்டோ, நீண்ட நாள் கெடாமல் இருக்கச் சேர்க்கப்படும் இரசாயனங்கள், கண்களைக் கவரும் செயற்கை நிறங்கள் என நாம் உண்கிற ஒவ்வொன்றும் மெல்லக் கொல்லும் நஞ்சாக மாறிவிட்டன.

விளைநிலங்களில் தெளிக்கப்படும் அதிகப்படியான பூச்சிக் கொல்லிகளும், இரசாயன உரங்களும் நாம் உண்ணும் காய்கறிகளையும் பழங்களையும் கூட விட்டுவைக்கவில்லை. இன்று நாம் உண்கிறோம் என்பது உடலை வளர்ப்பதற்காக அல்ல, மாறாக நோய்களை வளர்ப்பதற்காகவே என்றாகிவிட்டது.

இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், தைராய்டு போன்ற நோய்கள் ஒரு காலத்தில் ‘முதுமையின் அடையாளமாக’ இருந்தன. ஆனால் இன்று, இருபது மற்றும் முப்பது வயதிலேயே பல இளைஞர்கள் இந்த வாழ்வியல் நோய்களுக்கு ஆளாகி, வாழ்நாள் முழுவதும் மாத்திரைகளைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இன்று பலரது உணவு மேசைகளில் ஊறுகாய் ஜாடிக்குப் பதில் மாத்திரை டப்பாக்களே அதிகம் இடம்பிடித்துள்ளன. விட்டமின் சத்துக்களுக்குப் பழங்களை உண்பதை விட, விட்டமின் மாத்திரைகளை விழுங்குவதை நாம் எளிதாகக் கருதுகிறோம். இந்த ‘மாத்திரைக் கலாசாரம்’ தற்காலிகத் தீர்வைத் தந்தாலும், நீண்ட கால அடிப்படையில் நமது கல்லீரல் மற்றும் சிறுநீரகங்களைக் கடுமையாகப் பாதிக்கின்றன என்பதை நாம் மறந்துவிடுகிறோம்.

இந்த அபாயகரமான சூழலில் இருந்து நாம் மீள வேண்டுமென்றால், மீண்டும் நமது வேர்களுக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை. சத்துக்களே இல்லாத பாலிஷ் செய்யப்பட்ட அரிசியைத் தவிர்த்து, மீண்டும் சிறுதானியங்களான கம்பு, கேழ்வரகு, தினை, குதிரைவாலி போன்றவற்றை உணவில் சேர்க்க வேண்டும்.

வீட்டில் சமைக்கும் உணவே மிகச்சிறந்த மருந்து என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இயற்கை விவசாய முறையில் விளைந்த பொருள்களைத் தேடிப் பிடித்து வாங்குவதும், குறைந்தபட்சம் வீட்டிலேயே சிறிய அளவில் மாடித்தோட்டம் அமைப்பதும் இன்றைய காலத்தின் கட்டாயம். மருந்துகளைக் குறைத்து, முறையான உடற்பயிற்சியும், சரிவிகித உணவும் இருந்தால் மட்டுமே நாம் இழந்த ஆரோக்கியத்தை மீட்டெடுக்க முடியும்.

நாம் அடுத்த தலைமுறைக்குச் சேர்த்து வைக்கும் சொத்துக்கள் நிலமோ, பணமோ அல்ல. மாறாக அவர்களுக்கு நாம் கற்றுத் தரும் ‘ஆரோக்கியமான வாழ்வியல் முறை’தான்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை வெறும் பேச்சோடு நிறுத்தாமல், அதைச் செயலில் காட்ட வேண்டும். உணவைத் தேர்ந்தெடுத்து உண்போம். மருந்துகளைத் தவிர்ப்போம். நோய்கள் வந்த பின் மருந்து தேடி அலைவதை விட, நோய்கள் வராத உணவைத் தேடி உண்பதே அறிவுடைமை.




# பாடசாலை வளாகங்களைச் சுத்தம் செய்ய களுவாஞ்சிக்குடியில் விசேட வேலைத்திட்டம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்துக் பாடசாலைச் சூழல்களைச் சுத்தம் செய்து மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கல்விச் சூழலை உருவாக்கும் நோக்கில், செயற்படுத்தப்படும் விசேட வேலைத்திட்டம் ஒன்று களுவாஞ்சிக்குடி சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் மே.வினோராஜ் தெரிவித்துள்ளார்.

பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைக்கு அமைய, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து பாடசாலைச் சூழலும் இவ்வாறு சுத்தம் செய்யும் பணி முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்போது பிரதேச சபை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் பிரதேச சபை ஊழியர்கள், பெற்றோர்கள், இணைந்து பாடசாலை வளாகம் சுத்தம் செய்து மாணவர்கள் மகிழ்சிகரமாக தமது கல்வியைத் தொடர்வதற்கு இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கந்தளாய் ஜயந்திபுரம் பாடசாலையில் புதிய வகுப்பறை கட்டடம் கையளிப்பு





(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட, கந்தளாய் ஜயந்திபுரம் பாடசாலையில் 4.5 மில்லியன் ரூபா பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடம் மாணவர்களின் பயன்பாட்டுக்காக கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மிமன உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து உரிமையாளரிடம் தண்டம் அறவீடு!

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை மாநகரப் பகுதிகளில் பொதுமக்களுக்கு இடையூறாக காணப்பட்ட கட்டாக்காலி மாடுகள் மாநகர சபையால் பிடிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபியின் பணிப்புரைக்கு அமைவாக கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பொதுச் சந்தைகள் மற்றும் பிரதான வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கை கடந்த சில நாள்களாகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகளுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் தண்டப் பணம் அறவிடப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஏலவே பிடிபட்ட மாடுகள் மீண்டும் பொது இடங்களில் நடமாடுமாயின் அவை மீண்டும் பிடிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசுடமையாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர பிரதேசங்களில் பிரதான வீதிகள், பொதுச் சந்தைகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் பொது மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் பெரும் தொல்லையாக இருப்பதுடன் வாகனப் போக்குவரத்துகளுக்கும் இடையூறாக அமைகின்ற அதேவேளை விபத்துகளும் நிகழ்கின்றன.

குறிப்பாக மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகி காயமடைவதுடன் உயிராபத்தையும் எதிர் நோக்கி இருந்தனர். அத்துடன் இரவு நேரங்களில் பெரும் எண்ணிக்கையிலான கட்டாக்காலி மாடுகள் கூட்டம் கூட்டமாக நகரை ஆக்கிரமித்து அசுத்தப்படுத்தி வருவதும் அதனால் துர்வாடை வீசுவதும் வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி .இருந்தது.

இவற்றைக் கருத்தில் கொண்டு கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு அவற்றைக் கைப்பற்றி உரிமையாளர்களிடம் தண்டப் பணம் அறவிடும் நடவடிக்கை தீவிரப்படுத்த கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த காலங்களில் கட்டாக்காலிகளை பிடிப்பதில் பொலிஸார் மாநகர சபையினருக்கும் இழுபறி நிலைமை ஏற்பட்டிருந்தது. அவை யாவும் சீர் செய்யப்பட்டு கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் அறிவுறுத்தலுக்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் மாநகர சபையினருடன் தற்போது இணைந்து இந்தநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.





# பேசாலை சென். மேரிஸ் வித்தியில் இடம்பெற்றது கால்கோள் விழா

**(மன்னார் நிருபர்)**

2026 ஆம் ஆண்டுக்கான மன்னார் வலயக் கால்கோள் விழாவானது மன்னார் பேசாலை சென். மேரிஸ் பெண்கள் வித்தியாலயத்தில் கல்லூரியின் முதல்வர் திருமதி ஜே.எஸ். வியியன் பீரிஸ் தலைமையில் வெகு விமரிசையாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாகப் பேசாலை பங்குத்தந்தை அருட்பணி எஸ்.சத்தியராஜ் அடிகளார், முருகன் கோயில் இந்து மதக் குரு பிரம்மஸ்ரீ தர்ம குமார சர்மா குருக்கள், காட்டாஸ்பத்திரி பள்ளி வாயில் மௌலவி ஏ.எம். அபான், மன்னார் வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (பொது நிர்வாகம்) ஆதவன் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) . தவேந்திரலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் போது முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பாடசாலையின் ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.






# மத்திய நிதிநிலை அறிக்கை எமக்கு ஏமாற்றம் அளிக்கிறது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்



மத்திய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்துக்கான எந்த முக்கிய திட்டங்களும் இடம்பெறாதமை ஏமாற்றம் அளிக்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

"தமிழகத்துக்கான சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி வரும் வேளையில், இந்த ஆண்டாவது மத்திய பா.ஜ.க. அரசின் கண்களுக்கு தமிழகம் தெரியும்.

அவர்களது காதுகளில் நமது உரிமைக்குரல் விழும் என்று எதிர்பார்த்திருந்தோம். அந்த எதிர்பார்ப்பை பொய்க்கச் செய்து, ஏமாற்றத்தை வழங்கியிருக்கிறது மத்திய பா.ஜ.க. அரசு.

மத்திய நிதி அமைச்சர், நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 2026-27 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், தமிழகத்தின் நலன் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டுள்ளதோடு, ஏழைகள்- பெண்கள்- விவசாயிகள்- விளிம்புநிலை மக்கள் என எந்த பிரிவினருக்கும் நன்மை பயக்கும் முக்கிய திட்டங்கள் இதில் இடம்பெறவில்லை.

மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு முறையில், தமிழகம் உள்ளிட்ட வளர்ச்சியடைந்த மாநிலங்களை மத்திய அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது என்ற கருத்தை, நாம் வலுவாக முன்வைத்து வருகிறோம். மொத்த வரி வருவாயில் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் பங்கு 41 வீதத்திலிருந்து 50 வீதமாக உயர்த்தப்பட வேண்டும் என தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் கோரிக்கை இம்முறையும் புறக்கணிக்கப்பட்டு, மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு தொடர்ந்து 41 வீதம் என்ற அளவிலேயே தொடரும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த ஏமாற்றத்தையே தருகிறது.

தமிழகத்துக்கு என புதிய திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்பது தமிழகத்தை மத்திய அரசு தொடர்ந்து மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தி வருகிறது என்பதை வெட்டவெளிச்சமாக்கி இருக்கிறது.

வழக்கமாக மத்திய நிதியமைச்சர் வழங்கும் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் திருக்குறளும் இந்த முறை இடம்பெறவில்லை. தமிழகத்துக்கான எந்த முக்கிய திட்டங்களும் இடம்பெறவில்லை. மொத்தத்தில் ஏமாற்றம். ஏமாற்றம். ஏமாற்றம்."" என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஊழலுக்கான இடமில்லை என்பதால் 'பட்ஜெட்டை' தி.மு.க. குறை கூறுகிறது

## தமிழக பா.ஜ.க. தெரிவிப்பு

"நிர்மலா சீதாராமன் அறிவித்த மோடி வளர்ச்சி மாடல் 2026-27 'பட்ஜெட்டில்' தமிழகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள் நிறைய இருக்கின்றன. ஆனால் அதில் தி.மு.கவினர் ஊழல் செய்வதற்கான திட்டங்கள் இல்லை, என்பதனால் அவற்றை முதல்வர் மறைக்கப் பார்க்கக் கூடாது."

- இவ்வாறு தமிழக பா.ஜ.க. விமர்சித்துள்ளது.

இது தொடர்பான பா.ஜ.க. வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழக முதல்வர் ஸ்டாலின் மத்திய 'பட்ஜெட்' புத்தகத்தை புரட்டிப் பார்க்கக் கூடாது. நல்லெண்ணத்துடன் படித்துப் பார்த்து, தமிழகத்தின் நீண்ட கால கோரிக்கைகள் நிறைவேற்றும் வகையில் தமிழகத்திற்கான திட்டங்கள் அறிவிக்கப் பட்டுள்ளதை மனம் திறந்து அரசியல் நாகரீகத்தோடு வரவேற்க வேண்டும்.

இந்தியாவின் இளைய தலைமுறையின் எதிர்காலத்தை மாற்றக்கூடிய வகையில் உலகின் முதல் நிலை நாடாக உருவாகும் வகையில் மத்திய பட்ஜெட் 2026-27 உருவாக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி ஆட்சியில் பலவீனமான நாடாக 5 ஆம் நிலையிலிருந்த இந்தியா, மோடி அரசு பதவியேற்ற 11 ஆண்டுகளில் உலகின் தலைசிறந்த ஐந்து நாடுகளில் ஒன்றாக மாறி உள்ளது. நம் தமிழ் சகோதரி நிர்மலா சீதாராமன் இந்த சாதனையை அடைவதற்கு காரணமாக இருந்துள்ளார்.



தமிழன்னையின் தங்க மகளாக, இந்திய அரசியல் வரலாற்றில் முதல் முதலாக ஒன்பதாவது முறையாக, சாதனை சிகரமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க 'பட்ஜெட்டை' தாக்கல் செய்திருக்கும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு பெண்கள் பெருமை, நலன் காக்கும் முதல்வர் என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் முதல்வர் ஸ்டாலின் ஏன் வாழ்த்து சொல்லவில்லை?

பா.ஜ.க. தமிழ் பேசினாலும், பா.ஜ.கவில் தமிழர்கள் சாதனை புரிந்தாலும், பிரதமர் மோடி இந்திய மக்கள் அனைவரும் தமிழை கற்றுக் கொள்ள வேண்டும் என்று காசி தமிழ் சங்கத்தில் அறிவித்து இந்தியா முழுவதும் அனைத்து மாநில மக்களும் தமிழைப் பெருமையுடன் மகிழ்ச்சியுடன் கற்றுக் கொண்டாலும் தி.மு.க. வரவேற்காமல் அச்சப்படுவது ஏன்?

தமிழ் தமிழகம் தமிழருக்கு பெருமை சேர்க்கும் வகையில் தமிழகத்திற்கான தேர்தல் அரசியலுக்காக ரயில்வேத்துறை, சுற்றுலாத்துறை, கனிமவளத்துறை, தமிழகத்தின் மிக முக்கிய பொருளாதாரம் மண்டலங்களாக வளர்ச்சி அடையக் கூடிய வகையில் இராமேஸ்வரம், மதுரை, காஞ்சிபுரம் மற்றும் கும்பகோணம் போன்ற நகரங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், தமிழகத்தின் பண்டைய நாகரீகம் கலாச்சாரம் தொன்மைகளை விளக்கும் ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி சிறப்புகளை உலகம் முழுதும் கொண்டு போய் சேர்க்கும் திட்டம் என்ன மேலும் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும் விரைவில் மத்திய அரசு, தமிழகத்திற்கான பல முக்கிய வளர்ச்சி திட்டங்களை அறிவிக்க உள்ளது. பல லட்சம் கோடி திட்டங்களை தமிழகத்திற்கு பிரதமர் அறிவித்தாலும், மோடி என்ன செய்தார்? என்று திரும்பத் திரும்ப அவதூறு பரப்பி , பொய்யை உண்மையாக முயற்சிக்கும் திமுக அரசின் சூழ்ச்சிகள் தமிழக மக்களிடம் இனி எடுப்படாது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# காஸாவில் தடைப்படும் வைத்திய சேவைகள்



காஸாவிற்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் டொக்டர்ஸ் வித்தவுட் வோர்டர்ஸ் அமைப்பை இஸ்ரேல் தடை செய்துள்ளது.

பலஸ்தீன ஊழியர்களின் பட்டியலை வழங்க மறுத்ததை அடுத்து, அந்த அமைப்பை தடை செய்துள்ளதாக இஸ்ரேல் நேற்று அறிவித்தது.

இது தொடர்பில் இஸ்ரேலிய புலம்பெயர் விவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில்,

ஜனவரி தொடக்கத்தில் அமுலுக்கு வந்த விதிமுறைகளின் கீழ் காஸா மற்றும் மேற்குக் கரையில் செயற்படும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து இஸ்ரேல் கோரிய உள்ளூர் ஊழியர்களின் பட்டியலை சமர்ப்பிக்கத் தவறியதை காரணம் காட்டி காஸாவில் உள்ள உதவிக் குழுவின் செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளது.

புதிய பதிவுத் தேவைகளின் கீழ், எல்லைகள் இல்லாத வைத்தியர்கள் பெப்ரவரி 28 ஆம் திகதிக்குள் அதன் செயற்பாடுகளை நிறுத்திவிட்டு காஸா பகுதியை விட்டு வெளியேற வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

பலஸ்தீன ஊழியர்களை பெரிதும் நம்பியுள்ள எல்லைகளற்ற வைத்தியர்கள் , மோதல் முழுவதும் காஸாவில் அவசர மருத்துவ சேவையை வழங்குவதில் முக்கிய பங்கு வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மியன்மார் மாஃபியா உறுப்பினர்கள் மேலும் நால்வரை தூக்கிலிட்ட சீனா!



மியன்மாரில் மோசடி மையங்களை நடத்திய பிரபல பாய் குடும்ப குற்றக் கும்பலைச் சேர்ந்த நான்கு பேரை சீனா தூக்கிலிட்டுள்ளதாக பீஜிங்கின் அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குவாங்டாங் மாகாணத்தில் உள்ள நீதிமன்றத்தால் மோசடி, கொலை, காயம் மற்றும் பிற குற்றங்களுக்காக தண்டனை பெற்ற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பங்காளிகள் 21 பேரில் இந்த நான்கு பேரும் அடங்குவர்.

பாய் குடும்பத்தின் குற்றச் செயல்கள் ஆறு சீன குடிமக்களின் மரணத்திற்கும், ஒருவர் தற்கொலைக்கும், பலருக்கு காயங்களுக்கும் வழிவகுத்தன என்று தண்டனையை அறிவித்த நீதிமன்றம் கூறியது.

கடந்த நவம்பரில் நீதிமன்றம் 21 பேரில் ஐந்து பேருக்கு மரண தண்டனை விதித்தது.

இதில் குலத்தின் மூதாதையர் பாய் சூசெங், தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் உடல்நலக்குறைவால் இறந்தார் என்று அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென்கிழக்கு ஆசியாவில் ஆயிரக்கணக்கான சீனர்களை சிக்க வைத்துள்ள மோசடி நடவடிக்கைகளை ஒடுக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கடந்த வாரம் சீனா மிங் குடும்ப மாஃபியாவைச் சேர்ந்த 11 பேரை தூக்கிலிட்டது.

பல ஆண்டுகளாக, பைஸ், மிங்ஸ் மற்றும் பல குடும்பங்கள் மியான்மரின் எல்லை நகரமான லாக்கீங்கில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

அங்கு அவர்கள் கேசினோக்கள் மற்றும் சைபர் குற்ற நடவடிக்கைகளை நடத்தினர்.

# 90ஆவது வயதில் கிராமி விருது வென்றார் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா

திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா, தனது 90 ஆவது வயதில் முதல்முறையாக 'கிராமி' விருதை வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்று நடைபெற்ற 68 ஆவது கிராமி விருது வழங்கும் விழாவில் அவர் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

உலகின் உயரிய இசை விருதாகக் கருதப்படும் 'கிராமி' விருதினைத் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலை லாமா முதல்முறையாக வென்றுள்ளார்.

தலாய் லாமாவின் "Meditations: The Reflections Of His Holiness The Dalai Lama" என்ற ஆல்பத்திற்காக, 'சிறந்த ஒலி புத்தகம், கதை சொல்லல் மற்றும் விவரிப்பு' பிரிவில் இந்த விருது வழங்கப்பட்டது.

இந்தத் துறையில் தலாய் லாமாவுடன் பல பிரபலங்கள் போட்டியிட்டனர்.



இந்த ஆல்பம் வெறுமனே பேசும் ஒலி புத்தகம் மட்டுமல்ல, இதில் இந்தியச் செவ்வியல் இசை மற்றும் தியானம் தொடர்பான கருத்துக்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பிரபல சரோத் இசைக் கலைஞர் அம்ஜத் அலி கான் மற்றும் அவரது மகன்கள் அமன் அலி பங்காஷ், அயன் அலி பங்காஷ் ஆகியோரின் இசைப் பங்களிப்பு இதில் முக்கியமானது.

மன அமைதி, நல்லிணக்கம், ஆரோக்கியம் மற்றும் உலகளாவிய அன்பு ஆகிய வற்றை மையமாகக் கொண்டு இது உருவாக்கப்பட்டுள்ளது.

ரூஃபஸ் வைன்ரைட், மேகி ரோஜர்ஸ் மற்றும் ஆன்ட்ரா டே போன்ற சர்வதேசக் கலைஞர்களும் இதில் பங்கேற்றுள்ளனர்.

தலாய்லாமா நேரில் கலந்துகொள்ளாததால், அவருக்குப் பதிலாக இசைக்கலைஞர் ரூஃபஸ் வைன்ரைட் மேடைக்கு வந்து விருதைப் பெற்றுக்கொண்டார்.

"நிச்சயமாக நான் தலை லாமா அல்ல" என நகைச்சுவையாகத் தனது உரையைத் தொடங்கிய அவர், இந்தப் புனிதமான திட்டத்தில் பங்கேற்றது தனது கௌரவம் எனத் தெரிவித்தார்.

இதே பிரிவில் பிரபல ஹொலிவுட் இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் தனது முதல் கிராமி விருதை வென்று, 'EGOT' (Emmy, Grammy, Oscar, Tony) அந்தஸ்தைப் பெற்றவர் பட்டியலில் இணைந்தமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 03

# கனடா முரசு

திங்கட்கிழமை 02/02/2026

## கனடாவில் வாங்கூவர் தீவில் 3 சொகுசு படகுகள் தீக்கிரை



C2▶




# வேலை அனுமதிகளை விரைவுபடுத்தும் அரசு

கனடா அரசு, நாட்டில் நிலவும் தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்க முக்கியமான நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதற்கமைய, சுகாதாரம் மற்றும் வேளாண்மை போன்ற முக்கிய துறைகளில் பணியாற்ற விரும்பும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு வேலை அனுமதி (Work Permit) விரைவாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

C2▶

# இந்தியா – கனடா இடையே விரைவில் 3 பில்லியன் டொலர் யுரேனியம் ஒப்பந்தம்



இந்தியா மற்றும் கனடா இடையே மிகப்பெரிய யுரேனியம் ஒப்பந்தம் கையெழுத்தாகும் நிலையில் உள்ளது.

சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான இந்த ஒப்பந்தம், எதிர்வரும் மார்ச் இல் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், கனடா இந்தியாவுக்கு நீண்ட காலத்திற்கு யுரேனியம் வழங்கும்.

யுரேனியம் என்பது அணு உலைகளில் மின்சாரம் உற்பத்தி செய்ய முக்கியமான எரிபொருளாகும்.

இந்தியா தனது ஆற்றல் தேவைகளை பூர்த்தி செய்யவும்,

C2▶



# கனடாவில் வாங்கூவர் தீவில் 3 சொகுசு படகுகள் தீக்கிரை

கனடாவில் வாங்கூவர் தீவின் வான் ஜல் மாரினாவில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று சொகுசு படகுகள் முழுமையாக சேதமடைந்து மூழ்கியுள்ளன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சிட்னி தீயணைப்பு துறையின் தலைவர் பிரெட் மிக்கெல்சன் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

தீயில் உண்டான புகை, தீயணைப்பு நிலையத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவிலிருந்தும் தெளிவாகக் காணப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீயணைப்பு வீரர்கள் வந்தப்பொழுது மூன்று 70 அடி நீளமான படகுகள் முழுமையாக தீயில் மூழ்கியிருந்தன.

தீயை கட்டுப்படுத்த பணியாற்றிய குழுக்கள் சுமார் 90 நிமிடங்களில் தீயை அணைத்தனர்.

எனினும், தீ, புகை மற்றும் நீரில் சில படகுகள் சேதமடைந்தன. இந்த விபத்தில் யாரும் காயமடையவில்லை என மிக்கெல்சன் தெரிவித்துள்ளார்.

தீ விபத்திற்கான காரணங்கள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியா - கனடா...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூய்மையான மின்சாரம் உற்பத்தியை அதிகரிக்கவும் இந்த ஒப்பந்தத்தை முன்னெடுத்து வருகிறது.

கனடா உலகின் முக்கிய யுரேனியம் உற்பத்தியாளர்களில் ஒன்றாகும். இந்தியாவுக்கு யுரேனியம் வழங்குவதன் மூலம், இரு நாடுகளுக்கும் இடையிலான ஆற்றல் மற்றும் வர்த்தக உறவுகள் மேலும் வலுப்படும். இந்த ஒப்பந்தம், இந்தியாவின் அணு ஆற்றல் திட்டங்களுக்கு பெரிய ஆதரவாக இருக்கும்.

இந்தியாவின் மின்சார தேவைகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், அணு ஆற்றல் ஒரு முக்கிய மாற்று வழியாக பார்க்கப்படுகிறது.

தற்போது இந்தியா, சூரிய மற்றும் காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களை விரிவுபடுத்தி வருகிறது. அதேசமயம், அணு ஆற்றல் மூலம் நிலையான மற்றும் குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட மின்சாரம் பெற முடியும்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் போது, இந்தியாவின் ஆற்றல் பாதுகாப்பு மேலும் வலுப்படும். கனடாவுக்கும் இது ஒரு பெரிய வர்த்தக வாய்ப்பாக இருக்கும். இரு நாடுகளும் பரஸ்பர நன்மை அடையும் வகையில் இந்த ஒப்பந்தம் அமையும்.

மார்ச் மாதத்தில் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படும் இந்த யுரேனியம் ஒப்பந்தம், இந்தியா-கனடா உறவுகளில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

## வேலை அனுமதிகளை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாதியர்கள், வைத்தியர்கள், மருந்தாளர்கள், ஆய்வக நிபுணர்கள் போன்ற சுகாதாரத் துறையினர் மற்றும் பண்ணை மேற்பார்வையாளர்கள், இறைச்சி வெட்டுநர்கள், மீன் மற்றும் கடல் உணவு தொழிற்சாலை பணியாளர்கள் போன்ற வேளாண்மைத் துறையினர் இந்த திட்டத்தின் கீழ் முன்னுரிமை பெறுவார்கள் என குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை திணைக்களம் (IRCC) தெரிவித்துள்ளது.


இந்த புதிய நடைமுறையின் மூலம், LMIA அடிப்படையிலான வேலை அனுமதி, Francophone Mobility Work Permit, International Experience Canada போன்ற employer-specific அனுமதிகள் விரைவாக செயல்படுத்தப்படும். ஆனால், Post-Graduation Work Permit போன்ற open permits இதில் சேர்க்கப்படவில்லை.

மேலும், இந்த துறைகளில் குறைந்தது ஆறு மாத அனுபவம் உள்ளவர்கள், Express Entry முறையில் Permanent Residency (PR) பெறுவதற்கும் கூடுதல் வாய்ப்பு பெறுவார்கள்.

குறிப்பாக, சுகாதாரத் துறையில் பணிபுரிபவர்கள் குறைந்த Comprehensive Ranking System (CRS) மதிப்பெண்களுடன் கூட Invitation to Apply (ITA) பெறலாம்.

இந்த நடவடிக்கை தொழிலாளர் பற்றாக்குறையை குறைத்து, திறமையான குடியேற்றத்தை ஊக்குவிக்கும். இதன் மூலம், சுகாதாரம் மற்றும் வேளாண்மை துறைகளில் பணியாளர்கள் விரைவாக சேர்க்கப்பட்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவார்கள் என கனடா அரசு கூறியுள்ளது.

கனடாவின் இந்த புதிய திட்டம், வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை எளிதாக்குவதோடு, நிரந்தர குடிவரவுக்கான பாதையையும் திறக்கிறது. இது, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் தொழிலாளர்களுக்கு பெரிய வாய்ப்பாக அமையும்.




# கனடாவின் நோர்த் யோர்க் பகுதியில் வாகனம் மோதியதில் பாதசாரி உயிரிழப்பு

நோர்த் யோர்க்கில் வாகனம் ஒன்று மோதியதில் காயமடைந்த பாதசாரி ஒருவர் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார் என டொராண்டோ பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த விபத்து, ப்ரூக்ஹேவன் – ஏம்ஸ்பரி பகுதியில், லாரன்ஸ் அவென்யூ வெஸ்டின் தெற்கே அமைந்துள்ள கீல் ஸ்ட்ரீட் மற்றும் கல்லிவர் ரோடு சந்திப்புக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

பாதசாரி ஒருவர் வாகன விபத்தில் சிக்கியுள்ளார் என கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் அந்த இடத்திற்கு சென்றுள்ளது.


70 வயதுகளைக் கடந்த அந்த நபர் அவசர சேவையின் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் அவரது காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை என தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறெனினும் அந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் ஈடுபட்ட சிவப்பு நிற பிக்-அப் லொறியின் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே இருந்து, விசாரணைகளுக்கு முழுமையாக ஒத்துழைத்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து தொடர்பான விசாரணையை தற்போது பொலிஸின் விபத்து மறுகட்டமைப்பு பிரிவு மேற்கொண்டு வருகின்றது.




# ஹாமில்டன் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

கனடாவின் ஹாமில்டன் நகரில் 2026 ஆம் ஆண்டின் முதல் துப்பாக்கிச்சூடு சம்பவம் பதிவாகியுள்ள நிலையில், இதுதொடர்பாக பொதுமக்களின் உதவியை பொலிஸ் கோரியுள்ளது.

ஜனவரி 31 ஆம் திகதி மாலை சுமார் 7.13 மணியளவில், ஈஸ்ட் 28 ஆவது தெரு மற்றும் பென்னெல் அவென்யூ ஈஸ்ட் சந்திக்கும் பகுதியில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் துப்பாக்கிச்சூடு நடந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்தில், ஒரு ஆண் காயமடைந்துள்ளார் எனவும் அவர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார். பென்னெல் அவென்யூ ஈஸ்டிலிருந்து ஈஸ்ட் 27வது தெரு வழியாக வடக்கு திசையில் சென்றிருக்கலாம் என விசாரணையாளர்கள் நம்புகின்றனர்.

தற்போது விசாரணை ஆரம்ப கட்டத்தில் உள்ளதால், சந்தேக நபரின் விவரங்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.